# MEDIA STATEMENT

## இலங்கைக்கான தனது பயணத்தின் முடிவின் போது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் ஸெயிட் ராத் அல் ஹுஸைன் அவர்கள் விடுத்த ஊடக அறிக்கை

கொழும்பு, பெப்ரவரி 9, 2016

மாலை வந்தனம், உங்கள் வருகைக்கு நன்றி!

ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேன, பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க மற்றும் எதிர் கட்சித் தலைவர் ஆகியோருடனான சந்திப்புக்களை அடுத்து, எனது இலங்கைக்கான விஜயத்தை முடித்துக் கொண்ட பின்னர் இங்கு நான் வந்திருக்கின்றேன். அச்சந்திப்புக்களின் போது இலங்கையின் எதிர் காலத்தின் மீது முக்கியமான தாக்கங்களை எடுத்து வரக்கூடிய பரந்த வீச்சிலான பிரச்சினைகள் குறித்து நாங்கள் கலந்துரையாடினோம். சனிக்கிழமை இலங்கைக்கு வந்ததிலிருந்து நான் வெளிநாட்டு அலுவல்கள், நீதி, தேசிய உரையாடல் சிறைச்சாலை சீர்திருத்தங்கள், புனருத்தாரணம் மற்றும் மீள் குடியேற்றம் ஆகிய துறைகளுக்கு பொறுப்பான அமைச்சர்களையும்,அதே போல பாதுகாப்புச் செயலாளர், பாதுகாப்புத் துறை பிரதம அதிகாரி, இராணுவ மற்றும் விமானப் படை தளபதிகள் மற்றும் கடற்படையின் பிரதம அதிகாரி ஆகியோரையும் சந்தித்துள்ளேன்.

அது தவிர, இங்கு கொழும்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும், நிலைமாற்றக் கால நீதி தொடர்பாக அடுத்து இடம்பெறவிருக்கும் தேசிய கலந்துரையாடல்களை முன்னெடுக்கப்போகும் செயலணி அலுவலகத்திற்கும் நான் விஜயம் செய்தேன். அத்துடன் செயல் முனைப்பு உயிர்த்துடிப்பு மிகுந்த சிவில் சமூக அமைப்புக்களின் உறுப்பினர்களையும் உள்ளடக்கிய விதத்தில் இலங்கையின் தலைசிறந்த சிந்தனையாளர்கள் மற்றும் பகுப்பாய்வாளர்கள் ஒரு சிலரையும் நான் சந்தித்துள்ளேன்.

ஞாயிற்றுக்கிழமை வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு நான் விஜயத்தை மேற்கொண்டதுடன், அங்கு முதலமைச்சர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் ஆளுநர்கள் ஆகியோரையும் சந்தித்தேன். நேற்றுக் காலை புனித தலதா மாளிகைக்கு - அல்லது கண்டியில் அமைந்திருக்கும் புனித தந்தக் கோவிலுக்கு - விஜயம் செய்யக் கூடிய கௌரவம் எனக்குக் கிடைத்தது. அங்கு மல்வத்தை மற்றும் அத்கிரிய பீடங்களின் மஹாநாயக்க தேரர்கள் என்னை மிகுந்த நேசத்துடன் வரவேற்றார்கள். இந்த மாபெரும் சலுகையை எனக்கு வழங்கியமைக்காக நான் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். நான் கொழும்பு, யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களில் சந்தித்த இந்து, முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ சமூகங்களை சேர்ந்த உறுப்பினர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இதற்கு முன்னர் 2013 ஆகஸ்ட் மாதத்தில், எனக்கு முன்னர் இப்பதவியை வகித்தவர் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயத்திலும் பார்க்க எனது விஜயம் பெருமளவுக்கு நட்புறவுடன் கூடியதாகவும், ஒத்துழைப்பையும், ஊக்குவிப்பையும் எடுத்துக் காட்டுவதாகவும் இருந்து வந்தது. முன்னைய விஜயத்தின் போது ஆணையாளரை நாணயம் தொடர்பாக கடும் வசவுகளுடன் கூடிய தாக்குதல்கள் நடத்தப்பட்டதனை நீங்கள் அறிவீர்கள். மனித உரிமைகள் தொடர்பான எந்த ஒரு ஆணையாளரும் அச்சந்தரப்பத்தில் எழுப்பியிருக்கக் கூடிய மனித உரிமைகள் தொடர்பான எரியும் பிரச்சினைகள் சிலவற்றை அவர் எழுப்பியிருந்த ஒரே ஒரு காரணத்தினாலேயே அவரது விஜயம் அவ்வாறு களங்கப்படுத்தப்பட்டது.

அதே நபர்களில் சிலர் எனக்கும் அத்தகைய ஒரு வரவேற்பை வழங்கியிருந்தார்கள் என்பதை நான் அறிவேன் - சுவரொட்டிகளை நான் பார்த்திருக்கின்றேன். ஆனால், இலங்கையின் புதிய சூழலில் சிவில் சமூகத்தின் மிதவாத குரல்களையும் உள்ளடக்கிய விதத்தில் ஆகக் குறைந்தது அனைத்து குரல்களுக்கும் செவிசாய்க்கக் கூடிய ஒரு நிலைமை காணப்படுவது குறித்து நான் மகிழ்ச்சியடைகின்றேன். குரோதத்தையும், குறுகிய மனப்பான்மையையும் வெளிப்படுத்திக் காட்டும் விதத்தில் அவ்வப்போது ஓங்கியொலிக்கும் குரல்களும் இருந்து வருகின்றன. அவ்விதம் அவை ஓங்கியொலிப்பதன் ஒரேயொரு காரணத்தினாலேயே – அவற்றின் தகுதியையும் மீறி – அவை சற்று அதிகமாக செவிமடுக்கப்பட்டு வருகின்றன.

ஊடகங்களை சேர்ந்த நீங்கள் நன்கு அறிந்திருப்பதை போல, இலங்கை கடந்த ஆண்டில் ஒரு நல்ல முன்னேற்றத்தை சாதித்துக் கொண்டிருந்தது நீங்கள் எழுத விரும்பும் விடயங்களை எழுதுவதற்கு உங்களுக்கு அதிகளவில் சுதந்திரம் இருந்து வருவதுடன், நீங்கள் வெளியிட வேண்டும் என விரும்பும் செய்திகளை வெளியிடுவதற்கும் இப்பொழுது சுதந்திரம் இருக்கிறது. ஆகக் குறைந்தது கொழும்பிலும், தென் இலங்கையிலும் அச்ச உணர்வு கணிசமான அளவில் குறைவடைந்திருக்கிறது. வடக்கிலும், கிழக்கிலும் அது தணிந்திருந்த போதிலும், இன்னமும் நிலவி வருவது கவலைக்குரிய ஒரு விடயமாகும்.

முன்னேற்றத்தின் அளவு குறித்து கணிசமான அளவிலான கருத்து வேறுபாடுகள் நிலவி வந்த போதிலும், நாட்டில் ஒரு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்ற விடயத்தை அனேகமாக எல்லோருமே ஏற்றுக் கொள்கின்றார்கள். முன்னர் சட்டம் மற்றும் ஒழுங்கு என்ற விழுமியங்களுக்கு வெளியில் இடம்பெற்று வந்த வெள்ளை வான் கடத்தல்கள் - அதன் மூலம் எதிர்பார்க்கப்பட்டதை போல - ஊடகவியலாளர்கள், மனித உரிமை பாதுகாவலர்கள் மற்றும் அரசாங்கத்தை அல்லது அரசின் பாதுகாப்பு நிறுவனங்களை விமர்சிக்கத் துணிந்தவர்கள் ஆகியோரின் இதயங்களில் ஒரு பீதியை எடுத்து வந்திருந்தன. அத்தகைய கடத்தல் சம்பவங்கள் குறித்த செய்திகள் இப்பொழுது மிக அரிதாகவே அறிக்கையிடப்படுகின்றன. சித்திரவதைத் தொடர்பான முறைபாடுகளின் எண்ணிக்கை குறைவடைந்திருந்த போதிலும், இரண்டு அண்மைய சம்பவங்கள் எடுத்துக் காட்டுவதை போல, புதிய சம்பவங்கள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன. 2015 ஆம் ஆண்டில் இடம்பெற்றதாக கூறப்படும் மனகலக்கமூட்டும் இரு சம்பவங்களை இங்கு குறிப்பிட முடியும். பொலிஸார் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தொடர்ந்து வன்முறையையும், பலப் பிரயோகத்தையும் மேற்கொண்டு வருகின்றார்கள்.

அன்மைக் காலத்தில் பெருமளவுக்கு குறியீட்டுத் தன்மை கொண்ட பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன், அவை இனங்களுக்கிடையிலான உறவுகளில் சாதகமான ஒரு தாக்கத்தை எடுத்து வந்திருந்தன. 1950 களின் தொடக்கத்தின் பின்னர், முதல் தடவையாக சுதந்திர தின நிகழ்வில் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் தேசிய கீதத்தை இசைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தையும் இது உள்ளடக்குகின்றது. அதற்கு அடுத்த நாள் பரஸ்பர சமிச்ஞை ஒன்றை காட்டும் விதத்தில் வட மாகாணத்தின் முதலமைச்சர் யாழ்ப்பாணத்தில் இருக்கும் ஒரு பௌத்த விகாரைக்கு மரியாதை நிமித்தமான விஜயமொன்றை மேற்கொண்டார். முன்னர் தன்னை கொலை செய்வதற்கு சதி திட்டம் தீட்டி, அதன் காரணமாக சிறையில் அடைக்கப்பட்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கைதி ஒருவருக்கு ஜனவரி மாதத்தில் ஜனாதிபதி மன்னிப்பு வழங்கியிருந்தார். இவை இரண்டு சமூகங்களுக்கும் இடையில் நல்லிணக்கத்தை எடுத்து வரும் பாதையில் குறிப்பிடத்தக்க படிகட்களாக இருந்து வருகின்றன. இந்த இரு சமூகங்களும் பல்லாண்டு காலம் இடம்பெற்று வந்த மோதலின் விளைவாக தத்தமது தரப்பில் ஆழமான மனப்புண்களை கொண்டுள்ளன. இலங்கையின் அனைத்துப் பிரதேசங்களையும் சேர்ந்த இருந்தும் பெருந்தொகையான இளைஞர் யுவதிகளை ஓரிடத்தில் ஒன்றுக்கூட்டும் நோக்கில் வடக்கிலும் கிழக்கிலும் ஒரு சில பாரிய நிகழ்வுகள் திட்டமிடப்பட்டுள்ளன என்ற விடயத்தை அறிந்து நான் மகிழ்ச்சியடைந்தேன். வடக்கு, கிழக்கு

ஆகிய இரு மாகாணங்களிலும் ஆளுனர்கள் இப்பொழுது சிவிலியன்களாக இருந்து வருவதுடன், அதுவும் மற்றொரு முக்கியமான விருத்தி நிலைமையை எடுத்துக் காட்டுகின்றது.

கடந்த வருடத்தின் போது இடம்பெற்றிருக்கும் மிக முக்கியமான நீண்டகால சாதனைகளில் ஒன்று, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சட்டபூர்வமான தன்மை மற்றும் சுயாதீனம் என்பன மீள ஸ்தாபிக்கப்பட்டிருப்பதாகும். பொருத்தமான அரசியலமைப்பு செயல்முறைக்கூடாக உயர் நாணயத் தன்மையைக் கொண்ட புதிய தலைமை ஒன்றை நியமனம் செய்தமை, உயர் முக்கியத்துவம் வாய்ந்த இந்த தேசிய நிறுவனத்திற்கு மீண்டும் வலுவூட்டி, ஒரு புதிய ஆரம்பத்தினை முன்னெடுக்கும் வாய்ப்பினை வழங்குகின்றது. அரசாங்கம் இனி அதற்குத் தேவையான வளங்களை உடனடியாக வழங்கும் என்றும், அதன் உள்ளார்ந்த ஆற்றலை முழுமையாக பயன்படுத்தக் கூடிய விதத்தில் அதற்கு அவசியமான நிறுவன ரீதியான கௌரவத்தை பெற்றுக் கொடுக்கும் என்றும் நான் நம்புகின்றேன். அனைத்து இலங்கையர்களுக்கும் மனித உரிமைகள் தொடர்பான பாதுகாப்பை வழங்குவதற்கு மட்டுமன்றி, மனித உரிமைகள் கண்ணோட்டத்திலிருந்து சட்டங்கள் மற்றும் கொள்கைகள் என்பன தொடர்பாக நிபுணத்துவ ஆலோசனையை வழங்குவதற்கும் இது தேவைப்படுகின்றது

இந்த முன்னேற்றங்கள் - மற்றும் இங்கு நான் குறிப்பிடாத ஏனைய முன்னேற்றங்கள் - என்பவற்றுக்கு மத்தியிலும் கூட சுமார் 30 வருடக் கால மோதல்கள் மற்றும் விரோத உணர்வு என்பவற்றையடுத்து, இலங்கை இன்னமும் புதிய மாற்றத்தை ஆரம்ப கட்டங்களிலேயே இருந்து வருகின்றது. இந்த மோதல்கள் ஆயிரக்கணக்கான உயிர்களை பலி கொண்டது மட்டுமன்றி அரசின் மிக முக்கியமான பல கூறுகளை செல்லரிக்கச் செய்திருந்தன.

இந்த விஜயத்தின் போது, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மற்றும் ஏனைய துணைப்படை குழுக்கள் என்பவற்றின் கொடூரமான தாக்குதல்கள் மூலம் பாதிப்புக்களை எதிர்கொண்ட சிங்களவர், முஸ்லிம்கள் மற்றும் தமிழர் ஆகியோரை நான் சந்தித்தேன். படுகொலை செய்யப்பட்டவர்கள் குடும்ப உறுப்பினர்களையும், கடத்தப்பட்ட அல்லது பலவந்தமாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பிள்ளைகளின் தாய்மாரையும் சந்தித்தேன். பலவந்தமாக வெளியேற்றப்பட்டு, தமது சொந்த வீடு வாசல்களிலிருந்து துரத்தியடிக்கப்பட்ட வடக்கைச் சேர்ந்த முஸ்லிம்களையும், ஒருபோதும் திரும்பி வராத படை வீரர்களின் தாய் மார்களையும், இரு தரப்பையும் சேர்ந்த ஆயிரக்கணக்கான விதவைகளையும் சந்திக்கக் கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. பல்லாண்டு காலம் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்கள், கொலைகள் மற்றும் சமூகத்தின் மீது நிகழ்த்தப்பட்ட ஏனைய துஷ்பிரயோகங்கள் என்பவற்றின் துன்பம் மற்றும் அச்சம் என்பவற்றை நான் நன்கு அறிந்துள்ளேன்.

கைது செய்யப்பட்ட அல்லது பாதுகாப்பு படையினரிடம் சரணடைந்து அதன் பின்னர் காணாமல் போன நபர்களின் தாய்மாரையும், மனைவிமாரையும் நான் சந்தித்தேன். எத்தகைய குற்றச்சாட்டுக்களும் இல்லாது பல வருட காலம் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் நபர்கள் அல்லது பலவந்தமாக பெறப்பட்ட வாக்குமூலங்களின் அடிப்படையில் மட்டுமே குற்றம் சாட்டப்பட்டிருந்த நபர்கள் ஆகியோரின் உறவினர்களையும் நான் சந்தித்தேன். சுமார் 30 வருடங்களுக்கு முன்னர் ஜேவிபி கிளர்ச்சியின் போது பாதுகாப்புப் படையினரால் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு, இன்னமும் அது தொடர்பான உணர்வு ரீதியான வடுக்களை சுமந்து கொண்டிருக்கும் ஒரு பெண்மணியையும் நான் சந்தித்தேன். அந்தப் பெண்மணியின் வேதனையும், அதே போல அதனையொத்த பாதிக்கப்பட்ட நபர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினர் ஆகியோரின் வேதனையும் மிகவும் பயங்கரமாக இருந்து வருவதுடன், அவற்றை தணிப்பதற்கான வழிமுறைகள் கிடைப்பதாக இருந்தால், அந்த வேதனையை இன்னமும் நீடிக்கச் செய்வது ஒரு கொடூர செயலாகும்.

இந்த மோதலில் தனது கவனத்தை சிதறவிட்டிருந்த நிலையில் பெண்கள், உடல் ஊனமுற்ற நபர்கள், வேறுபட்ட பால் ஈர்ப்புக்களைக் கொண்ட நபர்கள், இலங்கையின் மத்திய மலைநாட்டில் வசித்து வரும் தோட்டத் தமிழர்கள் போன்ற பாரபட்சங்களை அனுபவித்து வந்த குழுக்கள் என்பவற்றின் முக்கியமான பிரச்சினைகளை இலங்கை கவனத்தில் எடுக்கத் தவறியுள்ளது. இக்குழுவினரும் புறக்கணிப்புக்கு அல்லது பாரபட்சத்துக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் ஏனைய குழுக்கள் மற்றும் சிறுபான்மையினர் ஆகியோரும் அவர்களுக்கு உரிய கவனத்தை இனிமேல் பெற்றுக் கொள்வார்கள் என்றும், அரசியலமைப்பு சீர்த்திருத்த செயன்முறையிலும் உள்ளடக்கிக் கொள்ளப்படுவார்கள் என்றும் நான் நம்புகின்றேன்.

நீண்ட காலமாக இடம்பெற்று வந்த மோதல் எடுத்து வந்திருக்கும் சேதங்களை நிவர்த்தி செய்வது மிகவும் சிக்கலான, பாரிய ஒரு பணியாக இருந்து வருவதுடன், அதன் ஆரம்ப வருடங்கள் மிக நிர்ணயகரமானவையாகும். ஆரம்ப வருடங்களின் போது தவறுகள் இழைக்கப்பட்டால் அல்லது முக்கியமான பிரச்சினைகள் உதாசீனம் செய்யப்பட்டால் காலப் போக்கில் அவற்றை தீர்த்து வைப்பது மிகவும் கடினமானதாக இருந்து வரும். கண்ணாடி இன்னமும் உருகிய நிலையில் இருந்து வரும் பொழுது நீங்கள் விரைவாக, சாமர்த்தியமாக செயற்பட்டால் அதனை உங்களால் பல்லாண்டு காலம் நீடிக்கக் கூடிய ஒரு நல்ல வஸ்துவாக வடிவமைத்துக் கொள்ள முடியும். அது வடிவம் குலைந்து, இறுக்கமடையத் தொடங்கும் பொழுது, அதனை நிவர்த்தி செய்வது மிக மிக கடினமானதாக இருந்து வரும். அதே போல மோதலுக்கு பிற்பட்ட தீர்வுப் பொதியின் 04 முக்கிய கூறுகளில் – உண்மையை கண்டறிதல், வகைப் பொறுப்புக் கூறுதல், நட்டஈடுகளை வழங்குதல் மற்றும் நிறுவன ரீதியான சீர்த்திருத்தம் என்பவற்றில் - ஏதாவது ஒரு கூறு அலட்சியப்படுத்தப்பட்டால் அல்லது தவறான விதத்தில் கையாளப்பட்டால் தீர்க்கப்படாத மனக்குறைகள் புரையோடிப் போய் புதிய மன அழுத்தங்களை உருவாக்க முடியும். நீண்ட கால ஸ்திர தன்மையை உருவாக்கக் கூடிய பாரிய வாய்ப்பும் இழக்கப்பட்டு விடும். நாட்டில் நீண்ட காலம் நிலைக்கக் கூடிய ஸ்திர தன்மை உருவாக்கப்பட்டால் அதன் விளைவாக செல்வச் செழிப்பு நிலை தோன்ற முடியும்.

இந்தப் பின்னணியில் இலங்கையின் விடயத்தில், கடந்த 03 தசாப்த காலத்தின் போது நாட்டின் பெரும்பாலான பிரதேசங்கள் பௌதீக ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும், சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் ஒன்றிலிருந்து ஒன்று வெவ்வேறு அளவுகளில் பிரிக்கப்பட்டிருப்பதுடன், அரசின் மீதும், சமூகங்ளுக்கிடையிலும் நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கான முயற்சியை முன்னெடுப்பதற்கு அரசியல் துணிவு, திடசங்கற்பம் மற்றும் திறமையுடன் கூடிய ஒருங்கிணைப்பு என்பன தேவைப்படுகின்றன.

நீங்கள் கொழும்புக்கு விஜயம் செய்யும் பொழுது அங்கு உயிர்த் துடிப்புடன் இயங்கி வரும் ஒரு நகரத்தை பார்க்கின்றீர்கள். பாரிய கட்டுமானங்கள் நிர்மாணிக்கப்படுவதுடன், வீதிகள் சுத்தமானவையாக காணப்படுகின்றன. தொழில்களும் செழித்து வளர்கின்றன. சுற்றுலாத் துறை புத்துயிர் பெற்று வருவதனை நீங்கள் பார்க்கின்றீர்கள்.

வடக்கு, கிழக்கு பிரதேசங்களுக்கு விஜயம் செய்யும் பொழுது சேதமடைந்த, ஒடுக்கப்பட்ட பிரதேசங்களையும், வறுமையையும் தொடர்ச்சியாக நிகழ்ந்து வந்திருக்கும் இடப்பெயர்ச்சிகளையும் நீங்கள் அவதானிக்கின்றீர்கள். பல்வேறு அபிவிருத்திகள் குறித்த அடையாளங்கள் அங்கு தென்படுகின்றன என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை. அதே போல மக்கள் பிரதிநிதிகள் ஒரு தூர நோக்கும், அபிலாஷைகளும் காணப்படுகின்றன. ஆனால், அதே வேளையில் அந்த நம்பிக்கைகள் எத்தகைய பலன்களையும் எடுத்து வரவில்லை என்ற எதிர்மறை உணர்வும், எதிர்பார்த்த பிரகாரம் காரியங்கள் நிகழாததன் காரணமாக மனக் கசப்பும் நிலவி வருவதனை காண முடிகின்றது.

பெருமளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்த உத்தேச அரசியல் அமைப்பு சீர்த்திருத்தத்திற்கு பெருமளவுக்கு ஆதரவு கிடைத்து வருகின்றது. அந்தச் சீர்த்திருத்த செயன்முறை அனைத்து இலங்கையர்களினதும் உரிமைகள் முழுமையாக அங்கீகரிக்கப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும். ஆனால், பின்னைய கட்டங்களில் அதே அளவில் முக்கியத்துவம் வாய்ந்த ஏனைய செயன்முறைகளான உண்மையை கண்டறிதல், நீதி மற்றும் வகைப் பொறுப்புக் கூறுதல் என்பவற்றின் செலவில் இதைச் சாதித்துக் கொள்ள நேரிடலாம் என்ற அச்சமும் நிலவி வருகின்றது.

தேசிய கலந்துரையாடல் செயன்முறையை முன்னெடுப்பதற்கென நியமனம் செய்யப்பட்டிருக்கும் செயலணி, சிவில் சமூகத்தின் உயர் தரம் வாய்ந்த பிரதிநிதிகளை உள்ளடக்கியிருக்கும் அதே வேளையில் இந்தச் செயன்முறை அவசர அவசரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்பது குறித்தும், அது பொருத்தமான விதத்தில் திட்டமிடப்படவில்லை அல்லது அதற்கு போதியளவு வளங்கள் வழங்கப்படவில்லை என்பது குறித்தும் - செயலணிக் குழுவின் உறுப்பினர்களையும் உள்ளடக்கிய விதத்தில் - கரிசனைகள் நிலவி வருகின்றன.

நம்பிக்கையை இல்லாதொழிக்கச் செய்யும் இந்தப் போக்கினை திசை திருப்புவதற்கென உடனடியாக மேற்கொள்ளக் கூடிய வழிமுறைகள் இருந்து வருகின்றன. முதலாவதாக, இராணுவம் தான் கையகப்படுத்தியிருக்கும் காணிகளை திருப்பிக் கொடுக்கும் செயற்பாட்டை துரிதப்படுத்த வேண்டியுள்ளது. ஏனெனில், அது இன்னமும் சட்ட ரீதியான உரிமையாளர்களிடமிருந்து காணிகளை கையகப்படுத்தி வைத்துக் கொண்டுள்ளது. யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை ஆகிய பிரதேசங்களில் ஒரு சில காணிகள் திருத்தியளிக்கப்பட்டிருந்த போதிலும், உடனடியாக திருத்தியளிக்கக் கூடிய, திருத்தியளிக்க வேண்டிய மேலும் பெருந்தொகையான காணிகள் இருந்து வருகின்றன. இக்காணிகள் திருத்தியளிக்கப்பட்ட பின்னர் இடம்பெயர்ந்த மக்களின் எஞ்சிய சமூகத்தினர் - அவர்களுக்குத் தேவையான உதவிகள் வழங்கப்படும் பட்சத்தில் - மீண்டும் தமது வீடு வாசல்களுக்கு திரும்பி வர முடியும். அப்பொழுது, புரையோடி போயிருக்கும் புண்களை நிரந்தரமாக குணப்படுத்தக் கூடிய வாய்ப்புக் கிடைக்கும். பாதுகாப்பு துறையில் மேற்கொள்ளப்படவுள்ள சீர்த்திருத்தத்தங்களின் முதல் படியாக வடக்கிலும், கிழக்கிலும் நிலைகொண்டிருக்கும் படை வீரர்களின் எண்ணிக்கையை அத்துமீறி பிரவேசித்தல் நிலைமைகள் மற்றும் மக்களை அச்சமூட்டி பலவந்தப்படுத்தும் நிலைமைகள் இல்லாமல் போகக் கூடிய மட்டம் வரையில் குறைத்துக் கொள்ளப்படுதல் வேண்டும்.

பாதுகாப்பு தொடர்பான காரணங்களுக்காக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் எஞ்சிய நபர்கள் தொடர்பாக ஒன்றில் குற்றச்சாட்டுக்களை தாக்கல் செய்வதற்கு அல்லது அவர்களை விடுதலை செய்வதற்கு அரசாங்கம் உடனடியாக ஒரு முறைமையைக் கண்டறிய வேண்டும். அது தவிர, காணாமல் போயிருக்கும் அனைத்து நபர்களும் மரணமடைந்துள்ளார்கள் என்ற விதத்தில் அண்மையில் பிரதம மந்திரி வெளியிட்டுள்ள அறிக்கை, இது வரையில் ஏதோ நம்பிக்கையில் வாழ்ந்து வந்திருக்கும் காணாமல் போயிருக்கும் நபர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு மத்தியில் பெருமளவுக்கு மனக் கவலையை உருவாக்கியுள்ளது. இந்த அறிக்கையையடுத்து, அவர்களில் மரணித்தவர்கள் யார், இன்னமும் வாழ்ந்து வருபவர்கள் யார், அல்லது கொல்லப்பட்டவர்கள் யார், என்பன தொடர்பான விபரங்களை துல்லியமாக இனங்கண்டு, அவற்றை வழங்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருத்தல் வேண்டும். மேலும், அம்மரணங்கள் தொடர்பாக – அவை சட்டபூர்வமான மரணங்களாக இருந்த வந்தாலும் சரி சட்ட விரோதமான மரணங்களாக இருந்து வந்தாலும் சரி – உரிய விதத்தில் பொறுப்புக் கூறுவதற்கும், அவர்களுடைய உடல்களை அடக்கம் செய்திருக்கும் இடங்களை அடையாளம் காண்பதற்கும் மற்றும் நிவாரணங்களை வழங்குவதற்கும் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

இங்கு நான் நடத்திய அனைத்து சந்திப்புக்களிலும் நிகழ்ச்சிநிரலில் முதன்மை ஸ்தானத்தை பெற்றுக் கொண்டிருந்த ஒரு விடயம், கடந்த ஆண்டு ஒக்டோபர் 01 ஆந் திகதி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை அமுலாக்குவதுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினையாகும். அந்தத் தீர்மானம் இலங்கையின் இணை அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், பேரவையின் 41 உறுப்பு அரசுகளினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருந்தது. அது நாடு பயணிக்க வேண்டிய பெருமளவுக்கு விவேகபூர்வமான ஒரு பாதையை எடுத்துக் காட்டியிருப்பதுடன், அதன் அமுலாக்கல் தொடர்பாக தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொறுப்பு எனது அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. எதிர்வரும் ஜுன் மாதத்திலும், மீண்டும் 2017 மார்ச் மாதத்திலும் அதன் முன்னேற்றம் குறித்து – அல்லது அம்முன்னேற்றக் குறைவு குறித்து – அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டிய பொறுப்பினையும் இது உள்ளடக்குகின்றது.

மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் மற்றும் அதற்கு அடிப்படையாக இருந்து வந்த விரிவான அனைத்துமடங்கிய அறிக்கை என்பவற்றின் நோக்கம் நல்லிணக்கம், வகைப் பொறுப்புக் கூறுதல் மற்றும் மனித உரிமைகள் என்பவற்றை மேம்படுத்துவதாகும். அறிக்கையின் வெளியீடு மற்றும் அதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் என்பன நாட்டில் பெருமளவுக்கு நம்பிக்கையை துளிர்க்கச் செய்துள்ளன. நாட்டை பெருமளவுக்கு செல்லரிக்கச் செய்திருந்த துயர நிகழ்வான போரின் இறுதி வருடங்களின் போது என்ன நடந்தது என்பது குறித்த முழுமையான விபரங்களை தெரிந்துக் கொள்ளக் கூடிய விதத்தில் இப்பொழுது நாட்டில் ஒரு நல்ல மாற்றம் ஏற்பட்டு வருகின்றது என்ற உணர்வும் காணப்படுகின்றது.

இலங்கை மக்கள் கடந்த வருடத்தின் ஜனாதிபதி தேர்தலிலும், பாராளுமன்றத் தேர்தலிலும் வாக்களித்திருந்த சீர்த்திருத்த நிகழ்ச்சிநிரலை பல்வேறு பல்வேறு வழிகளில் பிரதிபலிக்கும் ஒன்றாக மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் இருந்து வந்தது. நல்லிணக்கத்தை சாதித்துக் கொள்வதற்கும், வகைப் பொறுப்புக் கூறும் நிலையை எடுத்து வருவதற்கும், அவற்றிற்கூடாக நிலையான சமாதானத்தை நாட்டில் நிலைநிறுத்துவதற்கும் முன்னெடுக்கப்பட வேண்டிய மிகக் கடினமான ஒரு சில வழிமுறைகளை எடுத்துக் காட்டுகின்றது.

இந்தத் தீர்மானம் குறித்தும், அதனையடுத்து என்ன செய்ய வேண்டும் என்பது குறித்தும் தப்பெண்ணங்களும், கட்டுக் கதைகளும் நிலவி வருகின்றன. அது நாட்டின் இறைமையில் அல்லது சுதந்திரத்தில் தலையிடுவதற்கு அல்லது அவற்றை உதாசீனம் செய்வதற்கு வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்ட ஒரு முயற்சியாக இருந்து வரவில்லை. இது மறைவாக செயற்படும் வெளிநாட்டுச் சக்திகளினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு அரைக் காலனித்துவ செயற்பாடாகவும் அது இருந்து வரவில்லை. இந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டமை, இலங்கை அதன் துணிச்சலைக் காட்டிய ஒரு தருணமாக இருந்து வந்தது; பலவீனத்தை காட்டிய ஒரு தருணமாக அது இருந்து வரவில்லை. கடந்த காலத்தை நேர்மையான விதத்தில் திரும்பிப் பார்ப்பதற்கும், அவ்வாறு செய்வதன் மூலம் வருங்காலத்தில் இனங்களுக்கிடையிலான பதற்ற நிலைமைகள் மற்றும் அழிவுகரமான மோதல்கள் வெடிப்பதனை தவிர்ப்பதற்கான ஒரு முழுமையான உத்திரவாதத்தை வழங்குவதற்கும் இலங்கை தனக்கும், உலகத்திற்கும் மேற்கொள்ளும் ஒரு கடப்பாடாகவே அது இருந்து வந்தது.

இலங்கை ஒரு வெற்றிக் கதையாக இருக்க வேண்டுமென்பதே உலகின் விருப்பமாகும். இலங்கையில் நிலைபேறான வெற்றிக்கான வாய்ப்பு இருந்து வருவதனை உலகம் அவதானித்திருந்ததுடன், கடந்த அக்டோபர் மாதம் மனித உரிமைகள் பேரவை தீர்மானத்தின் போது அதற்கான பாதையை அமைத்துக் கொடுப்பதற்கென பெருமளவுக்கு நேரத்தையும், சக்தியையும் அதன் காரணமாகவே அது செலவு செய்திருந்தது. அந்தத் தீர்மானம் என்ன என்பதனை புரிந்து கொள்வதற்கும், அந்த அறிக்கை வலியுறுத்திக் கூறும் விடயம் என்ன என்பதனை புரிந்து கொள்வதற்கும் இலங்கையர்கள் அனைவரும் ஒரு முயற்சியை மேற்கொள்ள

வேண்டும் என நான் கேட்டுக் கொள்கின்றேன். அவ்விதத்தில் அதனை புரிந்துக் கொள்ளக் கூடிய நிலையில் இருந்து வரும் அனைவரும், இந்தப் பரிந்துரைகள் ஏன் முக்கியத்துவம் பெறுகின்றன என்பதனை எடுத்து விளக்குவதற்கும், – ஐக்கிய நாடுகள் சபையும், இலங்கை உள்ளிட்ட ஏனைய அரசுகளும் அதற்கு ஆதரவளித்தல் ஏன் என்ற விடயத்தையும் மற்றவர்களுக்கு எடுத்துக் கூற வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கின்றேன். அவ்வாறு செய்யும் பொழுது, இந்தச் சீர்த்திருத்தங்கள் அனைத்தையும் நீதி, வகைப்பொறுப்புக் கூறுதல் மற்றும் நல்லிணக்க முயற்சிகளை உதாசீனம் செய்வதற்கு முயன்று வரும் எதிர் குரல்கள் குறைந்த மதிப்பையே பெற்றுக் கொள்ளும். நிர்ணயகரமான இந்த முன்முயற்சிகள் மீதான நம்பிக்கையை குறைப்பதற்கு முயன்று வரும் ஆட்கள் இலங்கையில் சமாதானம் மற்றும் உறுதிப்பாடு என்பவற்றுக்கு சேதம் விளைவிக்கும் ஒரு விளையாட்டில் ஈடுபட்டிருக்கின்றார்கள்.

ஒரு நாடு உறுதிப்பாட்டை கொண்டிருப்பதுடன், வெற்றியீட்ட வேண்டுமானால் அது வலுவான, பக்கச்சார்பற்ற, நம்பகத்தன்மையுடன் கூடிய ஒரு நீதித் துறையை கொண்டிருத்தல் வேண்டும். பாதுகாப்புச் சேவைத் துறைகளும், நீதித் துறையும் அதன் அனைத்து பிரஜைகளினதும் நலன்களை கருத்தில் கொண்டு கருமமாற்றல் வேண்டும். இந்தத் துறைகளிலே நாட்டின் முதன்மையான நிறுவனங்கள் மிகவும் பாரதூரமான விதத்தில் பாதிப்புக்களை எதிர்கொண்டிருந்ததன. மோதல் மற்றும் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்று வந்த 3 தசாப்த காலத்தின் போது அவை மதிப்பிழந்து, ஊழல்வயப்பட்டிருந்தன. அடக்கு முறை இயல்பைக் கொண்ட பயங்கரவாத தடைச் சட்டம் மற்றும் ஏனைய அவசர கால அதிகாரங்கள் என்பவற்றில் தங்கியிருந்ததன் காரணமாக, இந்த மீறல்கள் இடம்பெற்றிருந்தன. இந்த நிறுவனங்களின் நற்பெயர், மக்கள் அவற்றின் மீது கொண்டிருக்கும் நம்பிக்கையிலேயே தங்கியுள்ளது. மேலே குறிப்பிடப்பட்ட அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கும் பரிந்துரைகளை அமுலாக்கம் செய்வதற்கூடாக, இலங்கையை சர்வதேச நிலைக்கு எடுத்து வருவதற்கு சர்வதேச சமூகம் உதவுவதற்கு முயன்று வருகின்றது.

இலங்கை தலை சிறந்த நீதிபதிகள், சட்டத்தரணிகள் மற்றும் சட்ட அமுலாக்கல் உத்தியோகத்தர்கள் ஆகியோரை கொண்டுள்ளது. ஆனால், கடந்த பல வருடங்களின் போது அவர்கள் நம்பியிருந்த முறையும், அவர்கள் மீது தங்கியிருந்த முறைமையும் பெருமளவுக்கு அரசியல்மயமாக்கப்பட்டு, வாத சமநிலை குலைந்ததாகவும் நம்பகத்தன்மையை இழந்தவையாக மாற்றமடைந்திருந்தன. கடந்த சில தசாப்தங்களின் போது, நாட்டின் வரலாறு நீதித்துறையின் தோல்விகள் பலவற்றினால் மாசடைந்துள்ளது. அனைத்து இலங்கையர்களும் இதனை அங்கீகரிக்கின்றார்கள். பிரதம மந்திரி பாராளுமன்றத்தில் ஜனவரி 27 ஆந் திகதி இடம்பெற்ற விவாதத்தின் போது இது தொடர்பான தனது கருத்துக்களை எவ்வித பாசாங்குமின்றி தெரிவித்திருந்தார். அநேகமாக ஒவ்வொரு வாரமும் 4 ஒரு தோல்வியடைந்த விசாரணை குறித்த ஒரு கதையையும் நீதிமன்றத்திற்குள் ஒரு கும்பல் அத்து மீறி பிவேசித்தமை தொடர்பான கதையையும் அல்லது தண்டனை வழங்கப்படாத ஒரு குற்றம் குறித்த ஒரு உதாரணத்தையும் வழங்கி வருகின்றது. பாலியல் வன்முறை மற்றும் பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல் தொடர்பான விடயங்கள் அரச நிறுவனங்களினால் மிக மோசமான விதத்திலேயே கையாளப்பட்டு வருகின்றன – குறிப்பாக இந்தக் குற்றச் செயல்களை இழைத்ததாக கூறப்படுபவர்கள் இராணுவ உறுப்பினர்களாக அல்லது பாதுகாப்புச் சேவைகளைச் சேர்ந்தவர்களாக இருந்து வரும் சந்தர்ப்பங்களில் - இந்நிலை காணப்படுகின்றது – அதன் காரணமாக இத்தகைய சம்பவங்கள் பரவலாக இடம்பெற்று வருகின்றன.

இந்தக் காரணங்களினாலேயே மேற்குறித்த அறிக்கையும், மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் சர்வதேச குற்றச் செயல்கள் இரு தரப்புக்களையும் சேர்ந்த தனி நபர்களினால் மேற்கொள்ளப்பட்டிருக்கும் குற்றச் செயல்கள் மற்றும் அப்பட்டமான மனித உரிமை மீறல்கள் என்பவற்றை கையாள்வதற்கென உருவாக்கப்படும் வகைப் பொறுப்புக் கூறும் பொறிமுறைகளில்

வெளிநாட்டு பங்கேற்பு இருக்க வேண்டுமென்ற விடயத்தை முன்மொழிந்துள்ளன. இது நான் முன்னர் குறிப்பிட்ட மிகவும் யதார்த்தமான, நடைமுறை ரீதியான பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கான நடைமுறை சாத்தியமான ஒரு யோசனையாக இருந்து வருகின்றது. ஆனால், - 2015 ஐ நா அறிக்கை மற்றும் தீர்மானம் என்பவற்றில் எடுத்துக் காட்டப்பட்டிருக்கும் விரிவான அம்சங்களில் இது ஒரு அம்சம் மட்டுமே ஆகும். ஆனால் இது ஒரு முக்கியமான அம்சமாக உள்ளது. அண்மைக் காலத்தில் இலங்கையில் இடம்பெற்று வந்த இந்த விடயம் விவாதங்களில் ஆதிக்கம் செலுத்தி வந்திருக்கும் அளவு துரதிர்ஷ்டவசமாகும். இலங்கையின் மோதலின் மையத்தில் தீவிரவாத, தேசியவாத சக்திகள் செயற்பட்டு வருவதுடன், அந்தச் சக்திகள் நாட்டின் நீண்ட கால மீட்சிக்கான வாய்ப்புக்களை மீண்டும் ஒரு முறை சீர்க்குலைப்பதற்கு இடமளிக்கக்கூடாது.

ஒரு வருடத்திற்கு முன்னர் பெருந்தொகையான இலங்கை மக்கள் மாற்றத்திற்காகவும், நல்லிணக்கத்திற்காகவும், நீதிக்காகவும் தமது வாக்குகளை அளித்திருந்தார்கள். - இரு தரப்புக்களையும் சேர்ந்த தீவிரவாத குரல்களை கொண்ட ஒரு சிறு தொகையினர் நம்பிக்கையை உருவாக்க வேண்டிய இடத்தில், அச்சத்தை உருவாக்குவதற்கு இடமளிக்க முடியாது. இலங்கையின் எதிர்காலம் தங்கியிருந்து வரும் இந்த முக்கியமான பிரச்சினைகள் குறித்து ஒரு பாரதூரமான விவாதத்தை மேற்கொள்ள வேண்டிய தேவை காணப்படுகின்றது. அந்த விவாதம், 2015 செப்டம்பர் ஐ நா அறிக்கையின் விரிவான முடிவுகள் தொடர்பான வெளிப்படையான, நேர்மையான ஒரு கலந்துரையாடலுடன் ஆரம்பிக்கப்படுதல் வேண்டும். இலங்கையிலுள்ள அனைவரும் இந்தச செயல்முறைக்கு பின்னால் அணி திரள்வதும் அனைத்துத் தரப்புக்களிலும் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களின் கண்ணோட்டங்களை சிறப்பாக புரிந்து கொள்வதும் மிக முக்கியமாகும்.

பாரிய அளவிலான மாற்றங்களை எடுத்து வருவதற்கான விருப்பினை அரசாங்கம் எடுத்துக் காட்டியுள்ளது. ஆனாலும், வடக்கையும், கிழக்கையும் சேர்ந்த பாதிக்கப்பட்ட மக்களும், இங்கு கொழும்பின் மிகவும் புத்திக் கூர்மையான பகுப்பாய்வாளர்கள் ஒரு சிலரும் அரசாங்கம் அதன் மனித உரிமைகளை தொடர்பான கடப்பாடுகளை பொறுத்தவரையில் ஒரு தடுமாற்ற நிலையை காட்ட முடியும் என்ற அச்சவுணர்வுகளை தெரிவிப்பதனை நான் செவிமடுத்திருக்கின்றேன எனவே, இன்று காலை நான் ஜனாதிபதி அவர்களையும் ,பிரதம மந்திரி அவர்களையும் சந்தித்த பொழுது இது தொடர்பான அவர்கள் கொண்டிருக்கும் ஆழமான கடப்பாட்டினை தெரிந்துக் கொண்டேன்.

இதனை நான் இங்கு மிகவும் தெளிவான விதத்தில் கூறுகின்றேன்: சர்வதேச சமூகம் எத்தகைய தயக்கங்களுமின்றி இலங்கையை அதன் அணிக்குள் வரவேற்பதற்கு விரும்புகின்றது. இலங்கை ஒரு பொருளாதார வலிமை மிக்க நாடாக வருவதற்கும் அது உதவி செய்வதற்கு விரும்புகின்றது. இலங்கையின் பாதுகாப்புப் படையினர் தமது நன்மதிப்பின் மீது ஏற்பட்டிருக்கும் களங்கத்தை போக்கிக் கொள்ள வேண்டுமெனவும், அவ்வாறு செய்யும் பொழுது பாதுகாப்புப் படையினரால் மீண்டும் ஒரு முறை சர்வதேச சமாதானச் செயற்பாடுகளில் ஓர் ஆக்கபூர்வமான பாத்திரத்தை வகிக்க முடியும் என்றும், பாதுகாப்புப் படைகளின் பெருந்தொயைான உறுப்பினர்களுக்கு கிடைக்க வேண்டிய உரிய மரியாதையை பெற்றுக் கொள்ள முடியும் என்றும் சர்வதேச சமூகம் நினைக்கின்றது.

ஆனால், இவை அனைத்தும் நிறைவேற வேண்டுமானால் இலங்கை அதன் கடந்த கால துர்த்தேவதைகள் மீது தாக்குதல் தொடுத்து, அவற்றை முறியடிக்க வேண்டும். செயற்படக் கூடிய நிறுவனங்களை நாடு உருவாக்க வேண்டியிருப்பதுடன், வகைப் பொறுப்புக் கூறுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்கென தற்பொழுது கிடைத்திருக்கும் மாபெரும் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, நாட்டு மக்கள் அனைவருக்கும் உண்மை, நீதி, பாதுகாப்பு மற்றும் செல்வச் செழிப்பு என்பவற்றை பெற்றுக் கொடுப்பதற்கு இலங்கை முன்வர வேண்டும். அதனை சாதித்துக் கொள்வதற்கு என்னாலான அனைத்து உதவிகளையும் செய்வதற்கு எனது தரப்பில் நான்

தயாராக இருக்கின்றேன். மிகவும் கடினமான இந்தச் செயன்முறைக்கூடாக இலங்கையை நெறிப்படுத்திச் செல்வதற்கு எனது அலுவலகம் தொடர்ந்தும் அதன் சேவையை வழங்குவதற்கு தயாராக உள்ளது.

நன்றி.